# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/3 - 2018 නොවැම්බර් මස 12 වැනි සඳුදා - 2018.11.12

*2097/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தியமைக்கப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துக்குப் பின்னர் வந்துள்ள அட்டவணையின் I ஆம் II ஆம் மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் மீதும், அதே அட்டவணையில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில், IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதங்கள் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் உற்பத்தி வரி செலுத்தப்படுதல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

*2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதிய 2079/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.*

*நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, நவெம்பர் 12.*


1A - PG 4310 — 557 (2018/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| இயைபுறு தலைப்பு இல. I | இயைபுறு குறியீட்டு இல. II | விபரம் III | வரி விகிதம் IV |
|---|---|---|---|
| **22.02** | | **நீர், கனிப்பொருள் நீரும் தாதுப்பொருள் நீரும் உட்பட மற்றும் காற்றூட்டப்பட்ட நீர், சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மண மூட்டப்பட்டவையும் பிற மதுசாரப் பானங்களும் தலைப்பு 20.09 இல் கீழுள்ள பழ அல்லது மரக்கறி சாறுகள் கொண்டிராதவை.** | |
| | 2202.99 | பிற : | |
| | | பழம் அல்லது மரக்கறி சாறினாலான குடிபானங்கள் : | |
| | 2202.99.51 | சீனி உள்ளடக்கம் - 100 மி. லீ. இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- அல்லது சீனி கிராம் ஒன்றிற்கு ரூ. 50 சதம் (100 மி. லீ. இற்கு 6 கிராம் நீங்கலாக) உள்ள டக்கத்தினைக் கொண் டுள்ள உற்பத்திகள் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | | | |
| | | பிற : | |
| | 2202.99.91 | சீனி உள்ளடக்கம் - 100 மி. லீ. இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- அல்லது சீனி கிராம் ஒன்றிற்கு ரூ. 50 சதம் (100 மி. லீ. இற்கு 6 கிராம் நீங்கலாக) உள்ள டக்கத்தினைக் கொண் டுள்ள உற்பத்திகள் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |

*11-1147*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.